# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tnerc.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின் குறைதீர்ப்பாளர்.**

**மேல்முறையீட்டு மனு எண். 24 / 2012**

திரு. வ.கு. கிருட்டிணமூர்த்தி,
த/பெ. குப்புசாமி,
250, ராசாமணித் தெரு,
குறிஞ்சி நகர் விரிவு,
வெளிச் செம்மண்டலம்,
கடலூர் ......... மேல்முறையீட்டாளர்
(திரு. வ.கு. கிருட்டினமூர்த்தி )

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை,
கடலூர்–4 ......... எதிர்மனுதாரர்
(பி. தங்கத்துரை / செயற்பொறியாளர்/
கடலூர் )

**கேட்புரை நாள் : 7–8–2012**
**ஆணை நாள் : 3.10.2012**

திரு. வ.கு. கிருட்டின மூர்த்தி, வெளிச் செம்மண்டலம் அவர்களின் 28.5.52012 நாளிட்ட மனுவானது மேல் முறையீட்டு மனு எண்.24/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல் முறையீட்டு மனுவின் மீது மின் குறை தீர்ப்பாளரின் கேட்புரை 7.8.2012 அன்று மின் குறை தீர்ப்பாளரின் அலுவலகத்தில் நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனு எதிர் மனுதாரரின் பதிலுரை, மேல் முறையீட்டாளரின் பதிலுரையில் (Rejoinder) பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் இருதரப்பின் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களையும் ஆராய்ந்து மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1. <u>மேல் முறையீட்டாளரின் வேண்டுகோள்:</u>

<u>**கோரிக்கை 1:**</u> மேல் முறையீட்டாளரின் வீட்டு மின் இணைப்பு எண்கள்135 மற்றும் 136 லும் உள்ள மின் இணைப்புத் தொடரினை மாற்ற வேண்டும் என்றும், மேலும் கம்பத்தில் மின் உருகு கம்பி (Aerial fuse) பொருத்தப்பட வேண்டும்.

<u>**கோரிக்கை 2:**</u> மின் இணைப்பு எண் 135 ல் எரிந்த போன மின் அளவி மாற்றப்படும் பொழுது சோதித்து காட்டபபட வேண்டும் என்றும் மின் அளவி பொறுத்தப்படும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய மற்ற எல்லா சட்ட விதிகளையும் கடைபிடிக்க உரிமம்தாரருக்கு உத்தரவு இடவேண்டும்.

<u>**கோரிக்கை 3:**</u> மின் இணைப்பு எண் 136 ல் உள்ள மோட்டார் எரிந்ததற்கு மின் வாரியத்தினர் தான் காரணம் என்பதால் அதற்கு இழப்பீடு தொகையாக, அதை சீர் செய்வதற்கு செலவான ரூ.2070/– தர உத்தரவு இடவேண்டும்.

<u>**கோரிக்கை 4:**</u> மின் ஊழியர் ஆனந்தன் தன்னை மிரட்டியதற்கு அவர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>**கோரிக்கை 5:**</u> உதவி பொறியாளர் மீதும் அவருடன் வந்த ஊழியர்கள் மீதும் சட்டத்திற்கு புறம்பான செயல்களுக்காக அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை.

<u>**கோரிக்கை 6:**</u> செயற்பொறியாளரின் பதிலுரையில் உள்ள தவறுகளுக்கு அவர்மீது நடவடிக்கை.

<u>**கோரிக்கை 7:**</u> 23.11.11 அன்றும் மின்னளவி எரிந்தது முதல் 15.5.12 அன்று வேறு மின்னளவி பொருத்தியது வரையிலான 5 மாதங்கள் 22 நாட்கள் மின்சாரம் இன்றி சிரமபட்டதற்கு இழப்பீடு மற்றும் மன உழைச்சலுக்கான இழப்பீட்டு தொகையாக ரூ.50,000/– ம் தர உத்தரவு இடவேண்டும் என்றும் மேலும் மின்வாரியத்தினரின் குதர்க்கமான பதில்களாலும், செயல்களாலும் ஏற்பட்டிருக்கும் அலைச்சலுக்கும், மன உழைச்சலுக்குமான இழப்பீடாக ரூ.50000/– கொடுக்க உத்தரவு இடவேண்டும்.

2. <u>**மேல் முறையீட்டாளரின் வாதங்கள்**</u> மேல் முறையீட்டாளர் தன்னுடைய மேல் முறையீட்டு மனுவில் தெரிவித்த வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

i) 15.5.12 அன்று காலை சுமார் 10 மணிக்கு சோதி நகர் மின் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர் தமிழ்ச்செல்வனும், இன்னொரு ஊழியரும் அவரது வீட்டிற்கு வந்து வேறு ஒரு மின்னளவியை 135 எண் இணைப்பில் பொருத்தி விட்டு, arial fuse வாங்கி பலகையில் பொருத்தி வைத்து விட்டு ‘‘எங்களை அழைத்தால் நாங்கள் வந்து மின் கம்பத்தில் பொருத்தி விடுகிறோம். அதன் பிறகு ஏதாவது பாதிப்பு வந்தால் அந்த உருகுக் கம்பி தான் போகும். மின்னளவி தீயாது.’’ என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அவர் புகார் மனுவில்

கோரியிருந்தபடி, அவரின் மின்னளவியிலிருந்து மின் கம்பம்வரை செல்லும் மின்கம்பிகளை மாற்றியோ, பழுது பார்த்தோதான் மின்னளவியைப் பொருத்துவார்கள் என்று எதிர் பார்த்தோம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

ii) அவரது வீட்டு 135 மற்றும் 136 ஆகிய 2 இணைப்புகளின் 2 மின்னளவியிலிருந்து மின் கம்பம் வரை போகும் 2 இணைப்புகளுக்கான மின் கம்பிகளையும், மின்மாற்றியையும் சரி பார்க்க வேண்டும் என்பதும், சரி பார்த்தப் பின்னரே 135 எண் இணைப்பிற்கு புது மின்னளவியைப் பொருத்த வேண்டும் என்பதும் அவரது முதல் புகாரில் உள்ள கோரிக்கைகள்.

(a) மின் ஊழியர்கள் மின் மாற்றியை சரி பார்த்தார்களா என்று தெரியவில்லை. எங்கள் வீட்டு 135, 136 எண்கள் கொண்ட இணைப்புகளில் உள்ள மின்னளவிகளிலிருந்து மின் கம்பம் வரை போகும் மின் கம்பிகளை, மின் ஊழியர்கள் சரி பார்க்கவில்லை. மின்னளவி மின்வாரியத்தின் பொறுப்பு என்று மின் சட்டத்தில் இருப்பது போலவே, மின் இணைப்புக் கம்பிகளும் (service wire) மின் வாரியத்தின் பொறுப்புதான் என்று மின் சட்டம், 2003, பிரிவு 43 லேயே உள்ளது.

(b) எனவே, மீண்டும் ஏதாவது பாதிப்பு ஏற்படுவதற்குள் மேற்குறிப்பிட்ட,

1) 15 ஆண்டுகள் பழைமையானதும், மற்றும் பழுதாகியிருக்க அதிக பட்ச வாய்ப்புள்ளதும், முனை எரிந்ததுமான 135 இணைப்பு எண்ணில் உள்ள மின் இணைப்புக் கம்பிகளை (service wire) உடனடியாக மாற்றித் தர வேண்டும் என்றும்,

2) 15 ஆண்டுகள் பழைமையானதும், மற்றும் பழுதாகியிருக்க அதிக பட்ச வாய்ப்புள்ளதும், எரிந்த மின் மோட்டார் இருந்த 136 எண் இணைப்பில் உள்ள மின் இணைப்புக் கம்பிகளை (service wire) உடனடியாக மாற்றித் தர வேண்டும் என்றும்,

3) இதுவரை பொருத்தாத arial fuse ஐ பொருத்தித் தரவும், உரிய மின் வாரியத்தினருக்கு உத்தரவிடும்படித் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

iii) கடலூார் மின் நுகர்வோர் குறை தீர் மன்ற தீர்ப்பின் படி, எங்களுக்கான 135 எண் இணைப்பில் இருந்த, எரிந்த மின் அளவியை எடுத்துக் கொண்டு வேறு மின்னளவியை பொருத்திய மின் ஊழியர்கள், அது புதியது தானா என்று தெரிவிக்கவில்லை.

அதனால்,

1) எங்களுக்கு பொருத்திய மின்னளவி புதியதும், பழுதற்றதும் தான் என்று நுகர்வோரான எனக்கு சோதித்துக் காட்டவும்,

2) சோதனைக்காகவோ, வேறு காரணங்களுக்காவோ அதுவரை ஓடிய அந்த மின்னளவி காட்டிய அளவை, பொருத்திய 15.5.2012 அன்று குறிக்காததைக் குறிக்கச் செய்யவும்,

3) மின்னளவி பொருத்தும் பொழுது கடை பிடிக்க வேண்டிய மற்ற எல்லா சட்ட விதிகளையும் செயல்படுத்தவும், உரிய மின் வாரியத்தினருக்கு உத்தரவிடும்படித் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

iv) புகாரில் மும் முனை இணைப்பு 136 எண்ணில் உள்ள மின் மோட்டார் எரிந்ததற்கு மின் வாரியத்தினர்தான் காரணம் என்பதால் அதற்கான இழப்பீடாக அதைச் சீர் செய்த தொகையான ரூ.2070/– கோரி, அதற்கான ரசீதின் நகலும் இணைக்கப்பட்டிருந்தது.

v) குறை தீர் மன்றத்தில் 30.3.12 அன்று மாலை 4 மணியளவில் நடந்த விசாரணையின் பொழுது, தெருவில் போகும் மின் கம்பிகளை கொடிகள் பற்றியதால் தாழ்ந்திருந்தால் மின் கம்பங்களில் தீப்பொறிகள் வரும். அதன் காரணமாக மின்னழுத்தம் குறைவாக வந்து மோட்டார் தீய்ந்து போக வாய்ப்புள்ளது என்று A.D. ஒப்புக்கொண்டார். அம் மன்றத்தின் உறுப்பினரும் வழக்குரைஞருமானவர் அதற்கு ஆன செலவுத் தொகையை மின் வாரியம் கொடுத்து விடலாம் என்று சொன்னார். அவர்கள் இருவரும் ஒப்புக் கொண்ட மோட்டார் இழப்பீட்டை மன்றத் தலைவர் தீர்ப்பில், மோட்டார் இழப்பீட்டிற்கானத் தொகையை மின் வாரியம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு வழங்காதது நியாயப்படியும், சட்டப்படியும் சரியில்லை. எனவே, மின்மோட்டார் எரிந்ததற்கான இழப்பீட்டுத் தொகையான ரூ.2070/– மின் வாரியம் கொடுக்க வேண்டும் என உத்தரவு இடும்படித் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

vi) 23.11.11 அன்று மின் ஊழியர் ஆனந்தன், தீய்ந்த மீட்டரை மாற்றச் சொல்லி, அலுவலகத்திற்கு நீங்கள் சீக்கிரம் கடிதம் எழுதிக் கொடுக்காவிட்டால், நீங்களே மீட்டரை கொளுத்தி விட்டீர்கள் என்று மின் வாரியத்தினர் வழக்குப் போட்டு விடுவார்கள் என்றும் 29.11.11 அன்று அதே மின் ஊழியர் ஆனந்தன், உடன் வந்த மின் ஊழியர் தமிழ்ச்செல்வனைக் காட்டி, நீங்கள் பணம் கட்டி மீட்டரை மாற்றிக் கொள்ளாததால், நீங்கள் மீட்டரை கொளுத்தி விட்டதாக இவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் இந்நேரம் காவலர்கள் வந்து விடுவார்கள்.' என்றும் மிரட்டியதால் எங்களுக்கு அதிர்ச்சியும், மன உளைச்சலும் ஏற்பட்டன.

vii) மின் ஊழியர் ஆனந்தன் பற்றி நான் கூறிய புகாரை, உரிய முறையில் நிரூபிக்கவில்லை என்று மன்றத் தலைவர் தனது தீர்ப்பில் சொல்லியிருப்பது சரியில்லை. நான் ஆனந்தன் சொன்னதை உரிய முறையில் தான் நிரூபித்திருக்கிறேன்.

viii) அதோடு, நாங்கள் பணம் கட்டி மின்னளவி மாற்றிக் கொள்ளா விட்டால் நாங்கள் கொளுத்தி விட்டதாக மின் அலுவலர்கள் வழக்குப் போட்டு விடுவார்கள் என்று மின் ஊழியர் ஆனந்தன் மிரட்டியது அரசு ஊழியர் விதிகள்படியும், பிற சட்டங்கள் படியும் குற்றமாகிறது. எனவே மின் ஊழியர் ஆனந்தன் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும் படித் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ix) **6.3.12** அன்று சோதிநகர் மின் பொறியாளர், **6, 7** மின் ஊழியர்களுடன் எங்கள் வீட்டிற்கு வந்து பேசினார். குறை தீர்க்கும் மன்றத்திற்கு நான் புகார் அனுப்பி விட்டப் பிறகு அவர் என்னிடம் பேச வந்ததே தப்பு. அவருடன் **6,7** மின் ஊழியர்களை கூட்டமாக அழைத்து வந்தது மேலும் தப்பு. மேலும் அவர் புதிய மின்னளவிக்கான கட்டணம் ரூ.**896/–** ம், எரிந்த அளவி இணைப்பிற்கு இது நாள் வரை குறைந்தபட்ச மின் கட்டணம் ரூபாய் **128/–** ம், நீங்கள் கட்ட வேண்டும் என்று ஒரு ஆவணத்தைக் காட்டிச் சொன்னார். எரிந்த மின் அளவியை மாற்றித் தர வேண்டியது மின் சட்டப்படி, மின் வாரியத்தின் கடமை என்று நன்றாகத் தெரிந்த, தெரிந்து இருக்க வேண்டிய ஒரு உதவி மின் பொறியாளர் எங்களை புதிய மின்னளவிக்களுக்கான கட்டணம் கட்ட வேண்டும் என்று சொன்னது சட்டத்திற்கு புறம்பாகச் சொல்லப்பட்ட மிகப் பெரியத் தப்பு.

x) மேலும் அவர் மின் அளவி எரிந்ததால், மின் இணைப்பு இல்லாத இணைப்பிற்கு தன் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஆவணபூர்வமாக குறைந்தபட்ச மின் கட்டணம் ரூபாய் **128/–** என்று குத்து மதிப்பீட்டில் ஏற்படுத்தியதைக் கட்ட வேண்டும் என்று சட்டத்திற்குப் புறம்பாகச் சொன்னது, மிகப் பெரிய தப்பு. அவருடன் வந்த மின் ஊழியர்களும் சட்டத்திற்குப் புறம்பாக அவர் சொன்னவைகளை ஆமோதித்துப் பேசியது மிகப் பெரிய தப்பு. எனவே, உதவி மின் பொறியாளரும், அவருடன் வந்த மின் ஊழியர்களும் செய்த சட்டத்திற்குப் புறம்பாக செயல்களுக்காக அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படித் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

xi) எண் 136 இணைப்பில் இருந்த, எங்கள் மின் மோட்டார் குறைவழுத்த மின்சாரத்தினால் தீய்ந்து, அதை சீர் செய்து ஓட்ட முற்பட்ட பொழுது அம் முனையில் அப்பொழுது மிகக் குறைந்த மின் அழுத்தம் இருந்ததால் மோட்டார் ஓடவில்லை என்றும் எனவே, தேவைக்கு ஏற்ப மாற்றிப் பயன் படுத்துவதற்கு என்றே 3 முனை இணைப்பில் பொருத்தப்பட்டுள்ள மின் முனை மாற்றும் விசையை மாற்றி மோட்டார் ஓட்டியதை பற்றி நான் 1.12.11 நாளிட்ட அசல் புகாரில் சொன்னதை, மின் முனை மாற்றும் முன்பே குறைந்த மின் அழுத்தம் இருந்தது என்று நான் எழுதியதை மறைத்து விட்டு, குறைந்த மின் அழுத்தம் இருந்ததால் தானே மாற்றம் தேவை ஏற்பட்டது என்று நான் எழுதியதையும் விட்டு விட்டு, குறைந்த மின் அழுத்தம் இருந்தால் தானே மாற்றம் தேவை ஏற்படும் என்ற அடிப்படையையும் விட்டு விட்டு, aerial fuse பொருத்தாத தன்னுடைய, தன் கீழ் பணி செய்யும் மின் ஊழியர்களின் தவறையும் விட்டு விட்டு, TAPPING CHANGE செய்ததால் தான் மின் சுமை அதிகமாகி குறைந்த மின் அழுத்தம் வந்தது என்று 12.3.12 நாளிட்ட கடிதத்தின் 2–ம் பக்கத்தில் சொன்னதும், என்னுடைய கடிதத்தின் வெவ்வேறு பத்திகளிலிருந்து வார்த்தைகளை / வாக்கியங்களை எடுத்து என்னுடைய நியாயமான கருத்துக்களை திரித்து சொன்னதும், மேலும், 12.3.12 மற்றும் 4.4.12 ஆகிய 2 கடிதங்களிலும் இதுபோல் நிறைய குதர்க்கமான, நியாயத்திற்கும், மின் சட்டத்திற்கு புறம்பானக் குளறுபடிகளைச் சொன்னதும் எங்களுக்கு மிகுந்த மன உளைச்சலையும், mental agony, harassment, annoy யும் ஏற்படுத்தியது.

xii) மின் சட்டப்படி, மின் அளவி மாற்றித் தர வேண்டிய மின் வாரியத்தினர், 135 எண் இணைப்பிற்கு மின் அளவி மாற்றிக் கொடுக்காமல், அதிக கால தாமதம் செய்ததாலும், மின்சாரம் வழங்க மாற்று ஏற்பாடு செய்யாததாலும், மின்சாரம் இன்றி நாங்கள் சிரமப்பட்டது, எனது முதல் புகாருக்குப் பின்பு ஏற்பட்டது என்பதால், காலதாமதத்திற்கான இழப்பீட்டையும், மன உளைச்சலுக்கான இழப்பீட்டையும், அதன் பிறகு நான் குறை தீர் மன்றத்திற்கு அனுப்பிய 26.3.12 நாளிட்ட எனது வாக்குமூலக் கடிதத்தில் 6,7 வது பக்கங்களிலும், 11.4.12 தேதியிட்ட எனது வாக்குமூலக் கடிதத்தில் 6 வது பக்கத்திலும், கோரியிருந்தேன். ஆனால் குறை தீர் மன்றத் தலைலவர், “ மனுதாரர் கூடுதலாகக் கோரியுள்ள பரிகாரங்களைப் பற்றி தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை .. அசல் .. மனுவில் கோரியுள்ள பரிகாரங்களையும் மாற்றிக் கொண்டும் மேம்படுத்திக் கொண்டும் இருப்பது ஏற்புடையதல்ல” என்றும் “மனுதாரர் தனது அசல் மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை பெறத் தக்கவரா” என்றும் தீர்ப்புரையின் 6 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

xii) எனவே, எங்கள் இணைப்பு எண் 135 க்கு மின்னளவி தீய்ந்தது பற்றி புகார் கொடுத்தும், சட்டப்படி அளவி மாற்றிக் கொடுக்க வேண்டிய மின் வாரியத்தினர் மாற்றிக் கொடுக்காததால், மாற்று ஏற்பாடு செய்யாததால் கடந்த 6 மாதங்களாக நாங்கள் மின்சாரம் இல்லாமல் நாங்கள் மிகவும் சிரமமும், மன உளைச்சலும் அடைந்ததற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50000/–ம். மின் வாரியத்தினர் உடனடியாக மாற்றிக் கொடுக்காததோடு மின்னளவி தீய்ந்ததிலிருந்து, மின் வாரியத்தினரின் நியாயத்திற்கும், சட்டத்திற்கும் சரியில்லாத குதர்க்கமான பதில்களாலும் செயல்களாலும் எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அலைச்சலுக்கும், மன உளைச்சலுக்குமான இழப்பீடாக ரூ.50000/–ம் எனக்குக் கொடுக்க வேண்டும் என மின் வாரியத்தினருக்கு உத்தரவிடும்படி மேல் முறையீட்டு அலுவலரானதங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**3) <u>எதிர் மனுதாரரின் பதிலுரை</u>** எதிர் மனதாரர், தன்னுடைய பதிலுரையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) மனுதாரரது மின் இணைப்பு எண்.135 மற்றும் 136 மின் இணைப்புகளுக்கு மின் இணைப்பு கம்பிகள் (service connection wire) மற்றும் Aerial fuse மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ii) மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் தீர்ப்புகளில் கூறியுள்ளபடி 15.5.2012 அன்று புதிய மின் அளவி மின் இணைப்பு எண்.135 ல் பொருத்திவிட்டு நுகர்வோரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

(iii) மின்னளவி தயாரிப்பு நிறுவனத்தில் ஓர்வு (test) செய்யப்பட்டு பெறப்படும் நிலையில் அதனை நுகர்வோர் முன்னிலையில் சோதித்து காட்ட வாய்ப்பில்லை. புதியதாக பொறுத்தப்பட்டுள்ள மின்னளவி காட்டும் அளவை (Initial Reading) நுகர்வோரின் வெள்ளை வண்ண மின் அட்டையில் எழுதித்தருவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மின்னளவி பொருத்தும் போது கடைபிடிக்க வேண்டிய அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்படும்.

(iv) மனுதாரரின் கோரிக்கையான மனுதாரர் வீட்டு மும்முனை மின் இணைப்பில் பொறுத்தப்பட்டுள்ள மோட்டார் பழுதானதற்கு தகுந்த இழப்பீடு வழங்க கோரியுள்ளார். இக்கோரிக்கையை பொறுத்து மனுதாரர் தனது மும்முனை மின் இணைப்பிற்கு எந்த நாளிலிருந்து எந்த நாள் வரை குறைந்த மின்னழுத்தம் செய்யப்பட்டதென்பதற்கும் எந்த தேதியில் மனுதாரர் மின்மோட்டார் பழுதானது என்பதற்கும் உரிய ஆவணங்கள் மூலம்

தெரிவிக்கவில்லை. மனுதாரர் இவ்வாறு நிரூபிக்காத நிலையில் மனுதாரரின் வீட்டின் மும்முனை மின் இணைப்பு எண்.136 ல் ஏற்பட்ட குறைந்த மின்னழுத்த குறைபாட்டின் காரணமாக 26.11.2011 அன்று மனுதாரரின் மின்மோட்டார் சீர் கெட்டது என்ற மனுதாரரின் கூற்றையும் அதன் காரணமாக மின் மோட்டாரை சரிசெய்வதற்கு மனுதாரர் கோரியுள்ள செலவு இழப்பீடு குறித்தும் மனுதாரர் தரப்பில் தகுந்த ஆவணங்கள் மூலம் தெரிவிக்கப்படவில்லை. எனவே இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(v) தனி நபர் குறித்த குற்றச்சாட்டினை உரிய முறையில் நிரூபிக்கவில்லை மேலும் மனுதாரரின் மின்னளவி மாற்றுதல் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அதிகாரியாக திரு.ஆனந்தன் என்பவர் இல்லை என்பது தெரியவருகின்றது. எனவே மனுதாரரின் குற்றச்சாட்டு மீது நடவடிக்கைகள் அவசியமற்ற நிலையிலும், மேலும் இம்மனுவின் நோக்கத்திற்கு தேவை இல்லாதது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(vi) TNERC, Standards of Performance Chapter-II, Para-II வின்படி எரிந்த மீட்டருக்கான தொகையை நுகர்வோர்தான் செலுத்த வேண்டும், என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தான் உதவி மின் பொறியாளர் தெரிவித்து உள்ளார். மேலும் தனி நபர் குறித்து குற்றச்சாட்டு இம்மனுவின் நோக்கத்திற்கு தேவையில்லாதது.

(vii) மின் இணைப்பு எண். 136ல் குறைந்த மின்னழுத்தம் இருந்ததற்கான எந்தவிதமான ஆதாரமும் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. ஏன் எனில் மனுதாரரின் வீட்டை கடந்து கடைகோடி மின்னழுத்தம் 220V என 9.3.2012 அன்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் மின் இணைப்பு எண்.135 மற்றும் 136 ஆகியவைகளை உதவி செயற்பொறியாளர், நகரம் / வடக்கு, கடலூர் மற்றும் உதவி மின் பொறியாளர், ஜோதி நகர், அவர்கள், ஆய்வு செய்தபோது மோட்டார் இருந்த இடமானது மழைப்பெய்தால் தண்ணீர் படும் அளவிற்கும் மேலும் பழைய நாள்பட்ட முறையாக பராமரிப்பு செய்யப்படாத மோட்டாராக இருந்ததும் கண்டறியப்பட்டது. எனவே மோட்டார் பழுதானதற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பு கிடையாது. மேலும் இந்த மனுதாரரை தவிர வேறு யாரும் அதே மின்கம்பத்தில் செல்லும் மற்ற மின் நுகர்வோர் யாரும் குறைந்த மின் அழுத்தம் பற்றி புகார் அளிக்கப்படவில்லை. மேலும் குறைந்த மின் அழுத்தத்தில் மின் மோட்டார் கெட்டுவிட்டது என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

(viii) **23.11.2011** முதல் **15.5.2012** வரை மின்சாரம் (மின் இணைப்பு எண்.**135)** இல்லை என்பது தவறான தகவல் மனுதாரர் இதற்கு முன் அளித்த கடிதத்தில் இதுபற்றி எதுவும் கூறவில்லை. அந்த வீட்டில் இரண்டு தளம் உண்டு. கீழ்தளம் மின் இணைப்பு எண்.**136** மும்முனை மின் இணைப்பு. முதல் தளம் மின் இணைப்பு எண்.**135** ஒரு முனை மின் இணைப்பு. இரண்டு தளங்களிலுமே மனுதாரரே வசிக்கிறார். வாடகைதாரர் யாரும் இல்லை. மின் இணைப்பு எண்.**135** எரிந்ததும் மின் இணைப்பு எண்.**136**ல் தற்காலிகமாக இணைப்பு அளித்ததால் தொடர்ந்து மின் வசதி இருந்தது. எனவே மனுதாரர் தெரிவித்தது போல் **5** மாதம் **22** நாட்கள் மின்சாரம் இன்றி சிரமப்பட்டதாக தெரிவித்து இழப்பீடு கோருவதும் நியாயமற்றது, முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

(ix) மேலும் மனுதாரர் தன்னுடைய மனுவில் குறைதீர் மன்றத்தலைவரின் குறைகள் பற்றியும் மற்றும் தீர்ப்புரையில் உள்ள மற்ற குறைகள் பற்றியும் கூறியிருப்பது இம்மனுவின் நோக்கத்திற்கு தொடர்பு இல்லாததால் மேற்கூறிய குற்றச்சாட்டை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**4)** **<u>மேல்முறையீட்டாளரின் மறுப்புரை (Rejoinder)</u>** எதிர்மனுதாரரின் பதிலுரையில் உள்ள வாதங்களுக்கு மறுப்புரையாக மேல்முறையீட்டாளர் கீழ்கண்டவற்றை தெரிவித்துள்ளார்.

i) எதிருரையின் முதல் பக்கத்தில், வரிசை எண் **1** ல் **135, 136** இணைப்புகளுக்கு, மின் இணைப்புக் கம்பிகள் (service wire) மற்றும் aerial fuse மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மேற்பார்வை பொறியாளர் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் அவ்வாறு சொல்வது, **27.7.12** அன்று எங்கள் வீட்டிற்கு வந்த **3** மின் ஊழியர்களின் செயல்களை வைத்துப் பார்க்கும் பொழுது நம்புவதற்கு ஏற்றதாக இல்லை.

ii) எங்கள் மும்முனை இணைப்பான **136** ல் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார் பழுதானதற்கானக் காரணங்களை ஒளிப்படங்கள், மோட்டார் சீர் செய்த ரசீது உள்ளிட்ட ஆதாரங்களுடன் நான் விளக்கமாக **1.12.11** நாளிட்ட அசல் மனுவிலும், மற்ற என் பதில் கடிதங்களிலும், தங்களுக்கு நான் அனுப்பிய மேல் முறையீட்டு மனுவிலும் தெரிவித்துள்ளேன். அப்படியிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் எதிருரையின் **2** ஆம் பக்கத்தில் உள்ள **3** வது வரிசை எண்ணில், மின் மோட்டார் எரிந்தது பற்றி நான் ஆதாரத்துடன் தெரிவிக்கவில்லை என்று சொல்லியிருப்பது அப்பட்டமான பொய்யாகிறது. எனவே அவர், மோட்டாருக்கான இழப்பீடு வழங்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்வது அடிபட்டுப் போய் விடுகிறது.

அதனால் சட்டப்படி மோட்டாருக்கான இழப்பீடு எனக்குக் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

iii) 4 வது வரிசை எண்ணில், தனி நபர் குறித்தக் குற்றச் சாட்டினை உரிய முறையில் நிரூபிக்க வில்லை. மின்னளவி மாற்றுதல் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அதிகாரியாக ஆனந்தன் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆபத்தான நேரத்திற்காக வரும் ஒரு ஊழியர் தப்பாகப் பேசுவார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? அதற்காக முன் கூட்டியே சாட்சிகளை வைத்திருக்க முடியுமா– இருப்பினும், ஆனந்தன் காவல் துறை பற்றிச் சொல்லி மிரட்டியதை நான் உரிய முறையில்தான் நிரூபித்திருக்கிறேன்.

iv) மின் ஊழியர் ஆனந்தன் எங்களிடம் மின்னளவி மாற்றுவது குறித்து மிரட்டிச் சொன்னவைகளை, மின் ஊழியர் சொல்லியிருந்தாலும் குற்றம்தான். மின் அதிகாரி சொல்லியிருந்தாலும் குற்றம் தான் எனவே எங்களை மிரட்டிய மின் ஊழியர் ஆனந்தன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது சட்டப்படியும், நியாயப்படியும் அவசியமும், தேவையுமாகிறது. மேலும் இம் மனுவின் நோக்கத்திற்கும் தேவையாக இருக்கிறது.

v) வரிசை எண் 5 ல் TNERC, Standards of Performance Chapter-II, Para-II வின்படி, எரிந்த மீட்டருக்கான தொகையை நுகர்வோர் தான் செலுத்த வேண்டும் என்று உள்ளது. இதனை தான் உதவி மின் பொறியாளர் தெரிவித்து உள்ளார். தனி நபர் குறித்து குற்றச்சாட்டு இம் மனுவின் நோக்கத்திற்கு தேவையில்லாதது என்று மேற்பார்வை பொறியாளர் தெரிவித்து உள்ளார். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பு என்ற தலைப்பில் உள்ள, அத்தியாயம்–2, பிரிவு 7 உட்பிரிவு (10) i & ii ல் எரிந்த மின்னளவியை மாற்றித் தர வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும் என்று தெளிவாக உள்ளது. ஒரே மின் சட்டத்தின் முரண்பாடான இரு சட்டங்கள் இருக்கவே முடியாது. எனவே சோதி நகர் உதவி மின் பொறியாளர், எரிந்த மின்னளவிக்கானத் தொகையை நுகர்வோர் தான் செலுத்த வேண்டும் என்று மின் சட்டத்திற்கு எதிராகச் சொன்னது மின் சட்டப்படி குற்றமாகும். அதனால் தனி நபர் குறித்த குற்றச்சாட்டு இம்மனுவின் நோக்கத்திற்குத் தேவையானது தான். உதவிப் பொறியாளருடன் வந்த மின் ஊழியர்களும் மின்னளவி எரிந்ததற்கானத் தொகையை நாங்கள்தான் கொடுக்க வேண்டும் என்றே சொன்னார்கள். அவர்கள் சொன்னதும் குற்றம்தான். மேலும் எரிந்த மின்னளவியை மாற்றித் தர வேண்டியத உரிமதாரரின் பொறுப்பாகும் என்ற

மின் சட்டத்தை மேற்பார்வை பொறியாளர் ஒப்புக் கொண்டு எரிந்த மின்னளவியை மின் வாரியம்தான் மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பில் சொல்லி இருக்கிறார். இதிலிருந்தும் உதவிப்பொறியாளர், நுகர்வோரான நாங்கள் தான் எரிந்த மின்னளவிக்கானத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னது குற்றம் என்று ஆகி விட்டது. அகவே உதவிப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

vi) எங்கள் வடக்குப் பார்த்த வீட்டின் முன் பகுதியில் தோராயமாக 6 அடி அகலம் உள்ள குறடு என்னும் பகுதி உள்ளது. அதன் மேல் கூரையாக பால்கனி இருக்கிறது. குறடுக்கு அடுத்து 7.5 அடியில் தாழ்வாரம் (veranda) இருக்கிறது. அதன் தென் கிழக்கு மூலையில் தரையில், திண்டில் மின் மோட்டார் உள்ளது. அதில் மழைத் தண்ணீர் பட வாய்ப்பே இல்லை. மேலும் மழைத் தண்ணீர் பட்டு கெடும் அளவிற்கு எவரும் மோட்டாரை வைக்க மாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. எனவே மழைத் தண்ணீர் படும் அளவிற்கு எங்கள் மோட்டார் இருப்பதாக மே.பா.பொறியாளர் சொல்வது தான் உண்மைக்குப் புறம்பானது.

vii) உதவிப் பொறியாளரும், செயற் பொறியாளரும் வந்து பார்க்கும் பொழுது, சமீபத்தில் எரிந்த எங்கள் மோட்டார் சீர் செய்யப்பட்டு, நல்ல நிலையில் இருந்தது அப்படியிருக்க, எங்கள் மோட்டார் பராமரிக்காமல் இருப்பது கண்டறியப்பட்டது என்று சொல்வது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது.

viii) மேலும் குறைதீர் மன்றத்தில் 30.3.12 அன்று மாலை 4 மணியளவில் நடந்த விசாரணையின் பொழுது, ‘‘தெருவில் போகும் மின் கம்பிகளைக் கொடிகள் பற்றித் தாழ்ந்திருந்ததால் மின் கம்பங்களில் தீப்பொறிகள் வரும். அதன் காரணமாக மின்னழுத்தம் குறைவாக வந்து மோட்டார் தீய்ந்து போகு வாய்ப்புள்ளது’’ என்று A.D. ஒப்புக்கொண்டார். அம் மன்றத்தின் உறுப்பினரும், வழக்குரைஞருமானவர் ‘‘அதற்கு ஆன செலவுத் தொகையை மின் வாரியம் கொடுத்து விடலாம் ’’ என்று சொன்னார். அவர்கள் இருவரும் ஒப்புக் கொண்ட மோட்டார் இழப்பீட்டை, குறை தீர் மன்றத் தலைவர் தீர்ப்பில், மோட்டார் இழப்பீட்டிற்கானத் தொகையை மின் வாரியம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு வழங்காததும், இப்பொழுதும் அவர், மோட்டார் பழுதானதற்கு (எரிந்ததற்கு) மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பு கிடையாது என்று சொல்வதும் நியாயப்படியும், சட்டப்படியும் சரியில்லை.

ix) **1.12.11** நாளிட்ட எனது அசல் மனுவிலேயே **2** ஆம் பக்கத்தில் மின் அளவி எரிந்ததையும், மின் ஊழியர் ஆனந்தன் வந்து மின் இணைப்பைத் துண்டித்ததையும் பற்றி விளக்கமாக எழுதியுள்ளேன். அடுத்த கடிதங்களிலும் மின்சாரம் இல்லாத நிலை பற்றி எழுதியுள்ளேன். ஆகவே இது பற்றி இதற்கு முன் அளித்தக் கடிதத்தில் எதுவும் கூறவில்லை என்பது, முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

x) குறை தீர் மன்றத் தலைவரின் தீர்ப்பில் உள்ள குறைகளைத் தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன் என மனுக்களில் நான் குறிப்பிட்டுள்ள மற்ற மின் அலுவலர்கள், ஊழியர்களின் குற்றம் குறைகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கும் படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**5)** **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>** மேல் முறையீட்டாளர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகிய இருவரும் தங்களுடைய வாதங்களை நேரிடையாக எடுத்துரைப்பதற்கு வசதியாக **7.8.2012** அன்று மின் குறை தீர்ப்பாளரின் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

மேல்முறையீட்டாளர் வ.கு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், எதிர்மனுதாரர் சார்பில் பி. தங்கத்துரை, செயற்பொறியாளர்/கடலூர் அவர்களும் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

**6)** **<u>மின்குறை தீர்பாளரின் தீர்</u>**வு

**6.1** மேல் முறையீட்டாளரின் வாதங்கள், எதிர் மனுதாரரின் வாதங்கள், மேல் முறையீட்டாளரின் மறுப்புரை மற்றும் மேல் முறையீட்டாளரும், எதிர் மனுதாரரும் கேட்புரை நாட்களில் தெரிவித்த மற்றும் அளித்துள்ள வாதங்கள் ஆவணங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட தீர்ப்புரை கோரிக்கை வாரியாக வழங்கப்படுகிறது.

**6.2** **<u>கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு</u>**

(i) மேல் முறையீட்டாளரின் வீட்டு மின் இணைப்பு எண்கள் **135** மற்றும் **136** லும் உள்ள மின் இணைப்பு தொடரினை (service wire) மாற்ற வேண்டும் என்று, மேலும் மின் கம்பத்தில் மின் உருகு கம்பி (aerial fuse) பொருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை சம்பந்தமாக மனுதாரர் இதுவரை அந்த service wire கள் மாற்றப்படவில்லை என்றும் தெரிவித்தார். எதிர் மனுதாரர், தான், மின் இணைப்பு எண்ணில் உள்ள (service wire) மின் இணைப்பு தொடரினை பரிசோதித்தாகவும், பரிசோதனையில் அந்த இரண்டு service wire

களுமே நன்றாகத் தான் உள்ளது என்று தெரிவித்தார். மேலும் தற்பொழுது இருக்கும் service wire தாமிரம் (copper wire) என்றும் புதியதாக போடும் service wire அலுமினியமாக இருக்கும் என்ற தகவலையும் தெரிவித்தார். இரண்டு service wire ஐயும் மாற்ற மதிப்பீடு செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் தெரிவித்தார். மேலும், விரைவில் மாற்றப்படும் என்றும் தெரிவித்தார். மனுதாரர் தற்பொழுது உள்ள service wire நன்றாக உள்ளது என்று சோதனையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டால் அதை மாற்ற வேண்டாம் என்றும் தெரிவித்தார். ஆனால், aerial fuse உடனேகம்பத்தில் பொருத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

(ii) எதிர்மனுதாரர், aerial fuse ஐ மட்டும் என்றால், தான் அந்த வேலையை **8.8.2012** க்குள் செய்து முடிப்பதாக உறுதி அளித்தார். அந்த உறுதியின் பெயரில், மனுதாரரும் இந்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாக எடுத்துக்கொள்வதாக கூறினார். எதிர்மனுதாரர் தன்னுடைய **14.8.2012** நாளிட்ட கடிதத்தில் **8.8.2012** அன்று மின்இணைப்பு எண்.**135** மற்றும் **136**க்கு arial fuse carrier பொருத்தப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார். எனவே, கோரிக்கை எண்.**1**, நிறைவேறியதாக கருதப்பட்டு வேறு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**6.3** <u>**கோரிக்கை இரண்டிற்கான தீர்வு**</u>

**6.3.1** மின் இணைப்பு எண்.**135** ல் எரிந்து போன மின் அளவியை மாற்றும் பொழுது சோதித்து காட்டபடவில்லை என்ற கோரிக்கைக்கு எதிர் மனுதாரர், மின்னளவி தயாரிப்பு நிறுவனத்தில் ஓர்வு (Test) செய்யப்பட்டு பெறப்படும் நிலையில் அதனை நுகர்வோர் முன்னிலையில் சோதித்து காட்ட வாய்ப்பில்லை என்றும் மின்னளவி பொருத்தப்படும்பொழுது உள்ள மின் அளவி காட்டும் அளவை நுகர்வோரின் மின் அட்டையில் எழுதி தருவதற்கு, மின் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும், மேல்முறையீட்டாளரின் முன்னிலையில் அவரின் வீட்டிலுள்ள மின்சாதனங்கள் இயக்கப்பட்டு, மின் அளவி செயல்படுவதும் தெரிவிக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். மின் நுகர்வோர் விரும்பினால், challenge test தான் பண்ண வேண்டும் என்ற தகவலும், மேல் முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

**6.3.2** மேற்கூறிய தகவலின் ஏற்பட்ட திருப்தியின் காரணமாக, மேற்கண்ட கோரிக்கையை, விலக்கிக் கொள்வதாக மேல் முறையீட்டாளர் தெரிவித்தார். எனவே, கோரிக்கை எண்.**2**, மேல் முறையீட்டாளரால் விலக்கி கொள்ளப்பட்டதால், வேறு தீர்வு தேவை இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

## 6.4 <u>கோரிக்கை மூன்றிற்கான தீர்வு</u>

**6.4.1** மேல் முறையீட்டாளரின் மும்முனை மின் இணைப்பு எண்.**136** ல் உள்ள மின் மோட்டார் எரிந்ததற்கு காரணம் மின் வாரியம் என்பதால் அதற்கான இழப்பீடாக அதை சீர் செய்த தொகையான ரூ**2070/–** தரவேண்டும் என்று கோரிக்கை விடுவித்தார்.

**6.4.2** 30.3.12 அன்று மாலை 4 மணியளவில் நடந்த விசாரணையின் பொழுது தெருவில் போகும் மின்கம்பிகளை கொடிகள் பற்றியதால், தாழ்ந்திருந்ததால் மின் கம்பிகளில் தீப்பொறிகள் வரும். அதன் காரணமாக மின்னழுத்தம் குறைவாக வந்து மோட்டார் தீய்ந்து போக வாய்ப்புள்ளது என்று ADE ஒப்புக்கொண்டார். அம்மன்றத்தின் உறுப்பினரும், வழக்குரைஞருமானவர், அதற்கு ஆன செலவுத் தொகையை மின்வாரியம் கொடுத்துவிடலாம் என்று கூறினார். ஆனால் மன்ற தீர்ப்பில் மோட்டார் சரி செய்வதற்கான செலவை மின்வாரியம் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு வழங்கப்படாதது நியாயப்படியும் சட்டப்படியும் சரியில்லை என்று வாதிட்டார்.

**6.4.3** எதிர் மனுதாரர் சார்பில் பங்குபெற்ற செயற்பொறியாளர், மின் மோட்டார் எரிந்து போவதற்கு காரணங்கள் தாழ்வழுத்தம் என்று மட்டும் கூறமுடியாது. மோட்டாரின் முறையான பராமரிப்பு இல்லாமை, bearing failure, மற்றும் தண்ணீர் மோட்டாருக்குள் செல்லுதல் போன்ற பல காரணங்கள் உள்ளன. மேலும் மேற்படி மின் இணைப்பில் தாழ்வழுத்தம் உள்ளது என்பதை, மேல் முறையீட்டாளர் ஆதாரத்துடன் தெரிவிக்கவில்லை என்றும் **9.3.12** அன்று மனுதாரரின் வீட்டைக் கடந்து கடைக்கோடியில் மின் அழுத்தத்தை ஆய்வு செய்த பொழுது **220** வோல்ட் என்று இருந்தது என்பதால், தாழ்வழுத்தம் இருக்க முடியாது என்று வாதிட்டார். மேலும், உதவி பொறியாளரும், உதவி செயற்பொறியாளரும் மின் இணைப்பு எண் **135** மற்றும் **136** ஐ ஆய்வு செய்யும் பொழுது மோட்டார் இருந்த இடமானது தண்ணீர் படும் அளவிற்கும், மோட்டாரும் பழைய, நாள்பட்ட, பராமரிக்கப்படாத மோட்டாராக இருந்தது கண்டறியப்பட்டது. எனவே, வாரியம் மோட்டார் பழுதானதற்கு பொறுப்பு ஆக முடியாது என்று கூறினார். மேலும் **27.7.2012** அன்று ஆய்வு செய்த பொழுது **226, 228 & 226** வோல்ட் மின்சார அழுத்தம் இருந்தது என்ற தகவலையும் தெரிவித்தார்.

**6.4.4** மேல் முறையீட்டாளர், மோட்டார் மழை நீர்படும் படியான இடத்தில் இல்லை என்றும், தான் மோட்டாரை நன்றாகப் பராமரித்து வருவதாகவும் கூறினார். மேலும், மும்முனை இணைப்பில் மின்சாரம் உள்ளது என்பதை தெரிவிக்கும் சிறிய விளக்குகள் உள்ள ஒளியின் அளவில் உள்ள வித்தியாசத்தை, ஒளிப்படமாக அனுப்பியுள்ளதை ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டார்.

6.4.5 மேற்படி கோரிக்கையின் மீது மேல் முறையீட்டாளரும், எதிர் மனுதாரரும் எடுத்துரைத்த வாதங்களை ஆராயும் பொழுது மின் மோட்டாரின் காயில் (coil) எரிந்து போனது உண்மை. ஆனால் எரிந்து போவதற்கு காரணம், தாழ்வழுத்தம் என்பது மேல் முறையீட்டாளரின் வாதம். அதற்கு ஆதாரமாக அவர் தெரிவிப்பது மும்முனை இணைப்பில் உள்ள indication விளக்குகளின் ஒளியில் உள்ள வித்தியாசம் மட்டுமே.

**6.4.6** அவருடைய மின் இணைப்பில் இருந்த மின் அழுத்தம் எவ்வளவு என்று தெரிவிக்கவில்லை. மேலும், அவரின் மின் மோட்டாரினை சீர்செய்த ரசீதினை ஆராய்ந்து பார்த்தால், அதில் bearing மற்றும் capacitor போன்றவைகளும் மாற்றப்பட்டுள்ளன என்று தெரிகிறது. Bearing failure இருந்தாலும் காயில் எரிந்து போவதற்கு சாத்தியம் உள்ளது. மேலும் capacitor fail ஆகி, மோட்டார் சுற்றாமல் இருந்து, உடனே மோட்டார் நிறத்தப்படா விட்டாலும், மோட்டாரின் காயில் (coil) எரிவதற்கு வாய்ப்புகள் உள்ளன. மேலும், மோட்டார் உள்ளே தண்ணீர் சென்றாலும், மோட்டார் காயில் ( coil) ன் insulation weak ஆக இருந்தாலும், மோட்டாரின் காயில் (coil) எரிந்து போக வாய்ப்புள்ளது. எனவே, தாழ்வழுத்தத்தை தவிர மற்ற காரணங்கள் இல்லை என்று உறுதி செய்வதற்கான ஆதாரங்கள் எதுவும் தரப்படவில்லை. மேலும், இழப்பீடு பெற விரும்புகின்றவர்தான், சந்தேகத்திற்கு இடமின்றி மேற்பட்ட இழப்பிற்கான காரணம் தாழ்வழுத்தம் என்று நிரூபிக்க வேண்டும். மேல் முறையீட்டாளரால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள், அந்த நிருபணத்தை தரவில்லை. மேலும், மன்ற விதி **7(1)** ன் படி தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல் திறசெந்தாரங்களில் விதிக்கப்பட்ட ஈட்டுத்தொகையினை வழங்க மட்டும், அனுமதியுள்ளது. மற்று இழப்பீடுகள் வழங்க விதிகளில் இடம் இல்லை. எனவே, மோட்டாரின் காயில் (coil) எரிந்து போனதற்கு எதிர் மனுதாரர் இழப்பீடு தரவேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**6.5 <u>கோரிக்கை நான்கிற்கான தீர்வு</u>** **23.11.11** அன்று மின் ஊழியர் திரு. ஆனந்தன், தீய்ந்த மீட்டரை மாற்ற சொல்லி, அலுவலத்திற்கு நீங்கள் கடிதம் எழுதி கொடுக்காவிட்டால், நீங்களே மீட்டரை கொளுத்தியதாக மின் வாரியத்தினர் வழக்கு போடுவார்கள் என்றும் **29.11.11** அன்று திரு. ஆனந்தன் அவர்கள் தன்னுடன் வந்த மின் ஊழியர் தமிழ்ச் செல்வனை காட்டி நீங்கள் பணம்கட்டி மீட்டரை மாற்றிக் ெ காள்ளாததால், இவர் நீங்கள் மீட்டரை கொளுத்தி விட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால், காவலர்கள் வந்து விடுவார்கள் என்று மிரட்டியதாகவும், எனவே அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

**6.5.1** மேற்கண்ட கோரிக்கைக்கு, எதிர்மனுதாரர், தனி நபர் குறித்து குற்றச்சாட்டினை உரிய முறையில் நிரூபிக்கவில்லை என்றும், மேலும் மனுதாரரின் மின்னளவியை மாற்றுதல் குறித்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அதிகாரியாகவும் திரு. ஆனந்தன் என்பவர் இல்லை

எனவே மனுதாரரின் குற்றச்சாட்டிற்கு நடவடிக்கைகள் அவசியமில்லை என்றும் மேல்முறையீட்டாளரின் மனுவின் நோக்கத்திற்கு தேவை இல்லாதது என்றும் தன்னுடைய எதிருரையில் தெரிவித்துள்ளர். மேல் முறையீட்டாளர், தன்னுடைய மறுப்புரையில், அதிகாரி பேசினாலும், மின் ஊழியர் பேசினாலும் தவறுதான். எனவே நடவடிக்கை வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**6.5.2** மேலும், கேட்புரை நாளில் கலந்து கொண்ட திரு.B. தங்கதுரை, செயற் பொறியாளர் அவர்கள் அலுவலகத்திலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும், நுகர்வோரிடம் நடந்து கொள்ளும் முறைபற்றி தான் உரிய அறிவுரை வழங்கியுள்ளதாகவும் கூறினார்.

**6.5.3** மேற்கண்ட வாதங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மேல்முறையீட்டாளர் திரு. ஆனந்தன் மிரட்டியதாக கூறப்படுவது நிரூபிக்கப்படவில்லை என்று எதிர் மனுதாரர் கூறியுள்ளார். மேல் முறையீட்டாளர், அவர் அப்படி பேசுவார் என்று எதிர்பார்த்து எப்படி நான் சாட்சிகளை வைத்திருக்க முடியும் என்று விவாதிட்டுள்ளார். இதுஒரு வாய்பேச்சு தகராறு. இதில் யார் கூறுவது உண்மை என்று தெரிவதற்கு சாட்சிகள் இல்லை. ஆனால், நுகர்வோரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஊழியர்களுக்கு, பயிற்சி அளிக்க வேண்டியது, உரிமம்தாரரின் கடமையாகும். எனவே, உரிமம்தாரர் தன்னுடைய ஊழியர்களுக்கு, தகுந்த பயிற்சியளித்து இதுபோன்ற நிகழ்ச்சிகள் பின்வரும் காலங்களில் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தபடுகிறது. மேலும், இதுபற்றி விசாரித்து, திரு. ஆனந்தன் அவர்கள் நுகர்வோரிடம் நடந்து கொண்ட விதம் தவறு என்று தெரிந்தால், அவருக்கும் தக்க அறிவுரை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.,

மேற்கண்ட அறிவுறுத்தலுடன் இந்த கோரிக்கை முடிவுக்கு கொண்டு வருப்படுகிறது.

**6.6** **<u>கோரிக்கை ஐந்திற்கான தீர்வு</u>** மேல் முறையீட்டாளர், சோதிநகர் உதவி மின் பொறியாளர் 6,7 மின் ஊழியருடன் எங்கள் வீட்டிற்கு வந்து பேசினார். அவர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு நான் மனு செய்த பிறகு தன்னிடம் பேச வந்தது தவறு என்றும், மேலும் எரிந்த மின் அளவிக்கான கட்டணமாக ரூ.896/– ம், குறைந்த பட்ச மின் கட்டணமாக ரூ.128/– கட்ட வேண்டும் என்றும் கூறினார். மின்சார சட்டத்தின் படி எரிந்த மின் அளவியை மாற்ற வேண்டியது மின் வாரியத்தின் கடமை என்று தெரிந்திருக்க வேண்டிய அவர் பணம், நுகர்வோரை கட்ட சொன்னது தவறு என்றும் மின் அளவி எரிந்ததால் மின்சாரம் இல்லாத இணைப்பிற்கு குறைந்த பட்ச மின் கட்டணம் கட்ட சொன்னதும் தவறு என்றும் எனவே அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளர்.

**6.6.1** எதிர் மனுதாரர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திற செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் அத்தியம்–2, பத்தி 11ன்

படி எரிந்த மீட்டருக்கான தொகையை நுகர்வோர்தான் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதை தெரிவித்தார் என்று தன்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் மின் வழங்கல் தொகுப்பின்படி குறைந்தபட்சமின் கட்டணம் வசூல் செய்ய வேண்டும் என்பதினால் சராசரி அளவிடு செய்யப்பட்டு விதிக்கப்பட்டதாக கூறினார். மேற்கண்ட காரணங்களால், உதவி பொறியாளர் விதிப்படிதான் செய்யபட்டுள்ளதாக கூறினார்.

**6.6.2** எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திற செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் அத்தியம் 2 ல் உள்ள பத்தி 11 சுட்டி காட்டியுள்ளதால் அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*'<u>11 மின்னளவி மாற்றி வைத்தல்</u> உரிமம்தாரர்கள், முறையீடுகள் வழியாகவே அல்லது மின்னளவி பழுதுற்றோ, அளவு சரியில்லாமலோ இருப்பதாக அறிந்தால், அத்தகைய மின் அளவியை உரிமம்தாரர் உரிய கட்டணங்கள் வசூலித்தும், முப்பது நாட்களுக்குள் சரியான புது மின்னளவி கொண்டு மாற்றி வைக்க வேண்டும்.'*

மேற்கொண்ட விதியின்படி பழுதற்ற மின் அளவியை மாற்ற உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும் என்று உள்ளது.

(ஆனால், மின் வழங்கல் தொகுப்பின் விதி 7(10)(iii)ன் படி மின்னளவி எரிந்ததற்கான காரணம் நுகர்வோர் எனநிறுவப்படாதவரையில் எரிந்த மின் அளவியை மாற்ற வேண்டியது உரிமம்தாரரின் பொறுப்பாகும் என்று உள்ளது.)

**6.6.3** எனவே, மேற்கண்ட விதியின்படிதான் அவர் எரிந்த மின்னளவிக்கு பணம் கட்ட வேண்டும் என்று நுகர்வோரிடம் தெரிவித்தாக கூறியுள்ளார்.

**6.6.4** மேலும், மின் வழங்கல் தொகுப்பின் விதி 6 ஐம் குறிப்பிட்டு அதன்படிதான் மாதாந்திர குறைந்த மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளதால் அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***<u>"6. சிறுமக் கட்டணங்கள் (Minimum charges)</u>***

*நுகர்வோர், உரிமதாரருக்கு கீழே விவரமாகத் தந்துள்ளபடி ஒவ்வொரு மின்னிணைப்புக்கும் சிறுமக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். மின்சாரம் நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையால் மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும், வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சிறுமக் கட்டணத்தை விடக் குறைவாக இருந்தாலும், சிறுமக் கட்டணத்தை கட்டியேயாக வேண்டும்.*

*a) உரிமதாரரின் துண்டிப்புக்கான உரிமைப்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கி.வோ.ஆ. அளவில் உள்ள மின் தேவையின் அடிப்படையில் பின்வருமாறு விதித்து வசூலிக்க வேண்டும்.*

*i) துண்டிப்பு ஒரு முழு மாதமானால் மின் தேவையில் 20 விழுக்காடு*

*ii) துண்டிப்பு மாதப் பகுதியாக இருந்தால் உண்மையாகப் பதிவான மின்தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவை அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அது.*

*b) நுகர்வோரின் வேண்டுதலின்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கணக்கிட கருத வேண்டிய கி.வோ.ஆ அளவில் உள்ள மின்தேவை, உண்மையில் நடப்பில் பதிவான கி.வோ.ஆ அளவு மின்தேவை, (துண்டிப்புக் காலம் மாதப் பகுதியாக இருக்கும்போது) ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அதுவாகும். ”*

**6.6.5** மேற்கண்ட விதியின்படி, நுகர்வோர், மின்சாரம் நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையின்படி மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும், வழங்கப்பட்ட மின்சார கட்டணம், சிறுமக்கட்டிணத்தை விட குறைவாக இருந்தாலும், சிறுமக்கட்டணத்தை செலுத்த வேண்டும் என்று உள்ளது.

**6.6.6** உதவிப் பொறியாளர் ஒழுங்குமுறை ஆணையத்தினரால் பிறப்பிக்கப்பட்ட விதிகளின்படி நுகர்வோர் பணம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். அந்த கட்டணங்கள் தவறு என்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்ப்பில் கூறிவிட்டது.

**6.6.7** இதில் உதவிபொறியாளர் தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திற செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளை பின்பற்றி நுகர்வோர் எரிந்த மின் அளவிக்கான பணம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். அதை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மின்வழங்கல் தொகுப்பு விதியின்படி தவறு என்று தீர்ப்பு அளித்துள்ளது. இதில் விதிகளில் கூறப்படாத எதையும் உதவி பொறியாளர் வேண்டும் என்றே செய்யவில்லை என்ற காரணத்தினால் அவர்மீது தவறு இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**6.7** **<u>கோரிக்கை ஆறின் மீதான தீர்வு</u>** மேல் முறையீட்டாளர், செயற்பொறியாளர் tapping change செய்ததால் தான் மின் சுமை அதிகமாகி, குறைந்த அழுத்தம் வந்தது என்று 12.3.12 கடிதத்தில் சொன்னதற்கும், மேலும் அவரின் கடிதங்களின் வெவ்வேறு பத்தியிலிருந்து வார்த்தைகளை/வாக்கியங்களை மின் கட்டணத்திற்கு புறம்பான

கருத்துகளை எடுத்து அவருடைய நியாயமான கருத்துகளை திரித்து அவரின் 12.3.12 மற்றும் 4.4.12 கடிதங்களில் கூறியவற்றிற்கான அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

**6.7.1** இந்த கோரிக்கையை பொருத்த வகையில், செயற் பொறியாளர் அவர்கள், 12.3.12 என்று தேதியிடப்பட்ட கடிதம் மின் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மேல் முறையீட்டாளர் அனுப்பிய மனுவிற்கான பதில், மேலும் 4.4.12 தேதியிடப்பட்ட கடிதமானது, மேல்முறையீட்டாளரின் 26.3.12 தேதியிட்ட மனுவிற்கான பதிலுரை. இவை இரண்டுமே, எதிர் மனுதாரரின் வாதங்கள், குறைதீர்க்கும் மன்றம், மனுதாரரின் வாதங்கள் மற்றும் எதிர் மனுதாரரின் வாதங்களில் உள்ள கருத்துக்களை ஆராய்ந்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகள் மற்றும் மின்சார சட்டத்திற்கு உட்பட்டு தீர்ப்பு வழங்க வேண்டும்.

**6.7.2** எனவே, எதிர் மனுதாரர் கூறிய விவாதங்கள் சரியில்லை என்று மேல் முறையீட்டார் அவர்மீது நடவடிக்கை எடுக்க சொல்லும் கோரிக்கை ஏற்புடையது இல்லை. எனவே, இதில் தீர்வு எதுவும் தேவையில்லை.

**6.8** **<u>கோரிக்கை ஏழின் தீர்வு</u>**

**6.8.1** 23.11.2011 அன்று மின்னளவி எரிந்தது முதல் 15.5.12 அன்று வேறு மின்னளவி பொருத்தியது வரையிலான 5 மாதங்கள் 22 நாட்கள் மின்சாரம் இன்றி சிரமபட்டதற்கான இழப்பீடு மற்றும் மன உளைச்சலுக்கான இழப்பீடாக ரூ.50000/– மும் மேலும் மின் அளவி எரிந்த உடன் மாற்றாமல், மின் வாரியத்தினரின் நியாயத்திற்கும், சட்டத்திற்கும் சரியில்லாத பதில்களால் அவருக்கு ஏற்பட்டு இருக்கும் அலைச்சலுக்கும், மன உளைச்சலுக்கும் இழப்பீடாக ரூ.50000/– கோரியுள்ளார்.

**6.8.2** எதிர் மனுதாரர் மேல் முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 135 ல் மின் அளவி எரிந்து, அவருடைய வீட்டின் கீழ்தளத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண் 136 ல் இருந்து தற்காலிகமாக மின் இணைப்பு அளித்ததால் தொடர்ந்து மின் வசதி இருந்தது. எனவே மேல் முறையீட்டாளர் தெரிவித்தது போல் 5 மாதம் 22 நாட்கள் மின்சாரமின்றி சிரமபட்டதாக தகவல் தெரிவித்து, இழப்பீடு கோருவது நியாயமற்றது என்று வாதிட்டார். மேலும் அவர் மின் இணைப்பு எண்.136 ல் நுகர்வோரின் பயன்பாடு, அந்த காலங்களில் அதிகரித்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார். மேல் முறையீட்டாளர், தான் மின் இணைப்பு எண் 136 லிருந்து, மின் இணைப்பு எண் 135 ன் பகுதிகளுக்கு உபயோகிக்கப்படவில்லை என்று கூறினார்.

**6.8.3** மேல் முறையீட்டாளரின் மன உளைச்சலுக்கான இழப்பீடுதொகை தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். இழப்பீடு சம்பந்தமாக மன்ற விதி **7(11)** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"7(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**6.8.4** மேல் முறையீட்டாளரின் மன உழைச்சலுக்கு இழப்பீடு மேற்கண்ட விதிகளில் இடம் பெறாததால் அந்த கோரிக்கை பரீசீலிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

**6.8.6** எதிர் மனுதாரரின் சார்பில் நேர்முக விசாரணையில் கலந்து கொண்ட செயற்பொறியாளர் தன்னுடைய **14.8.2012** கடிதத்தில் கீழ்கண்டவைகளை கூறியுள்ளார்.

**6.8.7** மின் இணைப்பு எண் **135** ல் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு எண் **136** ன் cutout carrier இருந்து மின்சாரம் வழங்கப்பட்டு இருந்ததாகவும், **15.5.2012**ல் அன்று மாற்று மின் அளவி பொருத்திவிட்டு கட்டவுட் கேரியரிலிருந்து மின்சாரம் வழங்கியது அகற்றப்பட்டது என்ற தகவலை தெரிவித்துள்ளார். மேலும் **5.4.2012** அன்று நேரடி ஆய்வுக்கு உதவி செயற்பொறியாளர் சென்றபொழுது மின் இணைப்பு எண் **135** மற்றும் **136** ஐ ஆய்வு செய்ய நுகர்வோர் அனுமதிக்கவில்லை என்றும் அப்பொழுதும் மின் இணைப்பு எண்**135** ல் உள்ள வீட்டிற்கு மின்சாரம் இல்லை என்று தெரிவிக்கப்படவில்லை எனவும் **7.4.2012** வரை தொலை பேசி வாயிலாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ மின் இணைப்பு எண் **135** ல் உள்ள வீட்டிற்கு மின் சாரம் இல்லை என்ற தகவலை தெரிவிக்கவில்லை என்றும் அவ்வாறு தெரிவிக்கப்பட்டு இருந்தால் மின்சாரம் உள்ளதா இல்லையா என்பதை உறுதி செய்து நடவடிக்கை எடுத்திருக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

**6.8.8** மேலும் கணணி மூலம் பதிவு செய்யப்பட்ட consumer ledger லிருந்து மின் இணைப்பு **136** ல் உள்ள மீட்டரில் குறிப்பிட்ட காலங்களில் வழக்கமான மின்னுகர்வை விட அதிகம் உள்ளது என்று அறியப்பட்டுள்ளதாகவும், தெரிவித்து அந்த மின் இணைப்பின் மின் பயனீட்டின் அளவுகளையும் தெரிவித்துள்ளார்.

**6.8.9** மேல்முறையீட்டாளர் தன்னுடைய 14.9.2012 கடிதத்தில் மின் வாரியத்தினர், மின்னளவி பொருத்தாததால், இரவில் தரைதள வீட்டில் தங்கியிருந்து 136இன் மின்சாரத்தை பயன்படுத்தியதால் தான் மேற்கண்ட உயர்வு என்று கூறியுள்ளார். மேலும் அவர் செயற்பொறியாளர் அவர்கள் 4.4.2012 அன்று தனக்கு எழுதிய கடிதத்தில் மீட்டர் ஒயர் அகற்றப்பட்டது. மின்துண்டிப்பு செய்யப்பட்டது என்று குறிப்பிட்ட செயற்பொறியாளர் 136க்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலை தெரிவிக்கவில்லை. எனவே தற்பொழுது இவ்வாறு சொல்வது பொய் என்று கூறியுள்ளார்.

**6.8.9** மின் இணைப்பு எண் 135 மற்றும் 136 ன் பயனீட்டளவை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மின் இணைப்பு எண் 135 ல் மின் அளவி பழுதடைவதற்கு முன்வு உள்ள பயனீட்டளவைவிட, மின் அளவி எரிந்து போன பின்பு உள்ள மின் பயனீட்டளவு கணிசமாக உயர்ந்து இருப்பது தெரிய வருகிறது. இரண்டு இணைப்புகளின் மின் பயனீட்டளவும், மின் அளவி எரிந்து போவதற்கு முன்பு, பின்பு மற்றும் புதிய அளவி பொருத்திய பின்பு என்ற வகையில் பிரிக்கப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மின் அளவு எரிந்து போவதற்கு முன்பு உள்ள பயனீட்டளவு | | | | மின் அளவி எரிந்தபின்பு உள்ள பயனீட்டளவு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| காலம் | 135ல் பயனீட்டளவு | 136 ல் பயனீட்டளவு | மொத்தம் | காலம் | 135 ன் பயனீட்டளவு | 136 ன் பயனீட்டளவு | மொத்தம் |
| 4/2011 | 120 | 50 | 170 | 12/1 | 150 | 70 | 220 |
| 6/2011 | 120 | 50 | 170 | 2/12 | – | 140 | 140 |
| 8/2011 | 130 | 40 | 170 | 4/12 | – | 200 | 200 |
| 10/2011 | 150 | 50 | 200 | 6/12 | 124 | 190 | 314 |
| | | | | 8/12 | 110 | 150 | 260 |

**6.8.10** மேலே உள்ள அட்டவணையை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மின் இணைப்பு எண்.136இன் சராசரி பயன்பாடு 50 அலகுகள் தான் 10/11 வரை என்று தெரிகிறது. ஆனால் மின் இணைப்பு எண்ணின் மின் அளவி 23.11.2011 ல் எரிந்த பிறகு அதன் பயன்பாடு 2/12 மாதத்தில் 140 யூனிட்களாகவும், 4/12 மாதத்தில் 200 யூனிட்களாகவும் உள்ளது. எனவே, சுமார் 3 லிருந்து 4 மடங்கு அதன் பயனீட்டளவு அதிகரித்துள்ளதாக தெரிகிறது. ஆனால் 8/2012ல் அதன் பயன்பாடு (அதாவது மின் இணைப்பு எண் 135 ல் மின் அளவி மாற்றிய பின்பு) 150 யூனிட் என்ற அளவில் உள்ளது. மேலும் மின் இணைப்பு எண் 135 மற்றும் 136 ன் மொத்த பயனீட்டளவு, 4/2011 வடி 10/2011 வரை 170 மற்றும் 200 யூனிட் என்ற அளவில் உள்ளது. 2/12 மற்றும் 4/12 பயனீட்டளவு மின் இணைப்பு எண் 136 ல் மட்டும் 140 மற்றும் 200 என்ற அளவில் உள்ளது.

எனவே, மின் இணைப்பு எண் 136 ல் பயன்பாடு அதிகரித்துள்ளது என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. அதற்கான காரணம் எதிர்மனுதாரர் கூறுவது போல் மின் இணைப்பு எண் 135 ற்கு மின் இணைப்பு எண் 136 ல் இருந்து மின்சாரம் வழங்கப்பட்டது என்பதாகவும் இருக்கலாம் அல்லது மேல்முறையீட்டளார் கூறுவது போல் அவர் இரவு நேரங்களில் மின்இணைப்பு 136லுள்ள தரை தளத்தில் தங்கி இருந்ததினால் ஏற்பட்ட மின் பயனீட்டினாலும் இருக்கலாம். மேலும் நுகர்வோரும் 23.11.2011 முதல் தனக்கு மின் இணைப்பு எண் 135 ல் மின்சாரம் இல்லை என்பதற்கு புகார் ஏதேனும் பிரிவு அலுவலகத்தில் செய்ததாக தெரிவிக்கவில்லை. ஆனால் அவர் 1.12.11 அன்று குறைதீர்க்கும் மன்றத்திற்கு பழுதான மின் அளவியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை அனுப்பியுள்ளார். மேலும் பழுதான மின் அளவியை மாற்றுவதற்கு பணம் செலுத்துவதில் அவருக்கும், எதிர் மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு உள்ளது என்பதும் தெரிந்ததே. மேலும் மேல்முறையீட்டாளர் இது சம்பந்தமாக, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனுசெய்துள்ளதால், மின் அளவி மாற்றப்படவில்லை என்ற காரணத்திற்காக மின் இணைப்பு துண்டிக்கப்படக்கூடாது என்பதும் நிதர்சனம். ஆனால் 2/2012 மற்றும் 4/12 மாதங்களுக்கான மின் கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதும் தெரிகிறது. மேல் முறையீட்டாளர், தன்னுடைய மின் இணைப்பில் மின்சாரம் தரப்படவில்லை என்பதால் தான் மின் கட்டணம் கட்ட வேண்டியது இல்லை என்று வாதிட்டார். இது சம்பந்தமாக, தமிழ்நாட மின்சார வழங்கல் விதி தொகுப்பின் விதி 6 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**6. சிறுமக் கட்டணங்கள்** (Minimum charges)*

*நுகர்வோர், உரிமதாரருக்கு கீழே விவரமாகத் தந்துள்ளபடி ஒவ்வொரு மின்னிணைப்புக்கும் சிறுமக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். மின்சாரம் நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையால் மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும், வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சிறுமக் கட்டணத்தை விடக் குறைவாக இருந்தாலும், சிறுமக் கட்டணத்தை கட்டியேயாக வேண்டும்.*

*a) உரிமதாரரின் துண்டிப்புக்கான உரிமைப்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கி.வோ.ஆ. அளவில் உள்ள மின் தேவையின் அடிப்படையில் பின்வருமாறு விதித்து வசூலிக்க வேண்டும்.*

*i) துண்டிப்பு ஒரு முழு மாதமானால் மின் தேவையில் 20 விழுக்காடு*

*ii) துண்டிப்பு மாதப் பகுதியாக இருந்தால் உண்மையாகப் பதிவான மின்தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவை அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அது.*

*b) நுகர்வோரின் வேண்டுதலின்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கணக்கிட கருத வேண்டிய கி.வோ.ஆ அளவில் உள்ள மின்தேவை, உண்மையில் நடப்பில் பதிவான கி.வோ.ஆ அளவு மின்தேவை, (துண்டிப்புக் காலம் மாதப் பகுதியாக இருக்கும்போது) ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அதுவாகும். உரிமதாரரின் நிறுவனத்தில் கதவடைப்பு, வேலைநிறுத்தம், தீ, புயல், வெள்ளப்பெருக்கு மற்றும் பிற உரிமதாரரின் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களால் உரிமதாரர் மின்சாரம் தர இயலாத நிலையில் இருந்தாலோ அல்லது அவற்றைப் போன்ற காரணங்களால் நுகர்வோர் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியளவு மட்டுமோ மின்சாரம் நுகர்வதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளாரென உரிமதாரர் நிறைவடைந்திருந்தாலோ, பட்டியலிடத் தக்க மின் தேவையின் 20 விழுக்காடு அல்லது பதிவான மின்தேவை இவற்றில் எது அதிகமோ அதற்கு உரிமதாரர் நுகர்வோரிடமிருந்து உண்மையில் நடப்பில் நுகர்ந்த மின்சாரக் கட்டணத்தோடு மாதச் சிறுமக் கட்டணத்தையும் வசூலிக்கலாம் என விதிக்கப்படுகிறது. மேலும் நுகர்வோர் மின்சாரம் நுகர்வதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தால்*

*i) நுகர்வோர் தொழில் நல (Labour) அலுவலரிடமிருந்து கதவடைப்பு, வேலைநிறுத்தம் அல் அல்லது தற்காலிகமான மூடுதல் நிலவும் கால அளவையும் அந்நிலை அறிவிக்கப்பட்ட தேதியும் பற்றிய சான்றிதழைத் தர வேண்டும்.*

*ii) கதவடைப்போ, வேலைநிறுத்தமோ தொடங்கும் தேதியை, பெரும மின் தேவை காட்டும் கருவியை மீட்டமைக்க, நுகர்வோர் காலந் தாழ்த்தாது உடனே அறிவிக்க வேண்டும். தற்காலிகமான மூடுதலைப் பொருத்தவரையில் அப்படி மூடப்போவதை நுகர்வோர் உடனே தெரிவிக்க வேண்டும். வேலை நிறுத்தமோ, கதவடைப்போ, தற்காலிகமான மூடுதலோ விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு அப்படி விலக்கிக் கொள்ளப்பட்ட தேதியையும் அறிவிக்க வேண்டுமென விதிக்கப்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னுலைகள் அமைந்த எஃகுத் தொழிற்சாலைக்கான உயர் அழுத்த மின்னிணைப்பு முழு வேலை நிறுத்தத்திலோ, மூடலிலோ இருந்தால் அப்போது உண்மையில் நடப்பில் பதிவான மின்தேவை, ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் வேலை நிறுத்தத்தில், மூடலில் உள்ள உலைகளின் ஒப்பளித்த கி.வோ.ஆ அளவில் உள்ள மின் தேவையின் விழுக்காடு இவற்றில் எது அதிகமோ அதைப் பட்டியலிடப் பயன்படுத்தும் நலத்தை உரிமதாரருக்குத் தர வேண்டும். கதவடைப்பு உள்ளபோது மேற்சொன்ன வழிவகை பொருந்தாது.*

*c)	உரிமதாரரின் உரிமையின்படியோ அல்லது நுகர்வோரின் வேண்டுதலின் படியோ துண்டிக்கப்பட்டுள்ள தா.அ. மின்னிணைப்பைப் பொருத்தவரையில் உரிய மாதச் சிறுமக் கட்டணத்தை உரிமதாரர் இசைவுப் பத்திரம் முடிவுக்கு வரும் வரை வசூலிக்க வேண்டும்."*

**6.8.11** மேற்கூறிய விதி **6** ன்படி, நுகர்வோரால் மின்சாரம், நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையால் துண்டிக்கப்பட்டிருந்தாலும், வழங்கப்பட்ட மின்சாரத்தின் கட்டணம் சிறுமக் கட்டிணத்தைவிட குறைவாக இருந்தாலும், சிறுமக்கட்டணத்தை கட்டியாக வேண்டும் என்று தெரிகிறது. எனவே **2/2012** மற்றும் **4/2012** கான சிறுமக்கட்டணம் கட்டபடாததால் மின் இணைப்பு மறு இணைப்பு கொடுக்கப்பட வேண்டியது இல்லை என்று தெளிவாகிறது.

**6.8.12** மேல்முறையீட்டாளர் **10/2011** மற்றும் **12/2011** காலங்களுக்கான மின் கட்டணங்களை செலுத்தியுள்ளார். ஆனால், **2/2012** மற்றும் **4/2012** க்கான மின்கட்டணத்தை **29.6.2012**இல் தான் செலுத்தியுள்ளார். **2/2012**க்கான மின்னளவி மின் அட்டையில் பதியப்படாமல் மீட்டர் எரிந்தது என்று பதிவு செய்யப்பட்ட நாள் **8/2/2012.** எனவே, அந்த நாளிலிருந்து **20** நாட்களுக்குள் மின்கட்டணம் செலுத்தப்படவேண்டும். அதற்கு பின்புதான் மின்துண்டிப்பு செய்யமுடியும். எனவே, **23.11.2011** முதல் **28.2.2012** வரை மின்கட்டணம் கட்டப்படவில்லை என்ற காரணத்தினால் மின்துண்டிப்பு செய்யமுடியாது.

**6.8.13** ஆனால் **23/11/2011** to **28/2/2012** வரையிலான நாட்களுக்கு மின் இணைப்பு வழங்காதற்கு சரியான விளக்கம் எதிர் மனுதாரரிடம் இருந்து பெறப்படவில்லை. எரிந்துபோன மின்அளவி மாற்ற பணம் கட்ட வேண்டும் என்ற அறிவிப்பு எதுவும் எழுத்துமூலம் வழங்கப்பட்டு, **15** நாட்களுக்குள் பணம் செலுத்தப்படவில்லை என்றால் மின் துண்டிப்பு செய்யப்படும் என்ற அறிவிப்பும் வழங்கப்பட்டதாக தெரியவில்லை. ஆனால் எதிர் மனுதாரர் மின் இணைப்பு எண் **136** ன் கட் அவுட்டிலிருந்து மின் இணைப்பு எண் **135** ற்கு மின்சாரம் வழங்கப்பட்டதாக கூறுகிறார். ஆனால் அதனை மேல்முறையீட்டாளர் மறுத்துள்ளார். ஆனால், மின் இணைப்பு எண் **135** ல் நேரடி மின்சாரம் வழங்கப்படாமைக்கு service line சரியில்லை என்பது போன்ற வேறு காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. மேலும், செயற்பொறியாளர் / கடலூர் அவர்கள் மேல் முறையீட்டாளருக்கு எழுதிய **12.3.2012** நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளரின் ஒருமுனை மின் இணைப்பிற்கு (மின் இணைப்பு எண் **135** க்கு) மறு மின் இணைப்பு வழங்க குறைந்தபட்ச மின் கட்டணம் மற்றும் மின் அளவி எரிந்ததற்கான தொகை ஆகியவற்றை செலுத்தினால் உடன் மறு மின் இணைப்பு வழங்க உதவிப்பொரியாளர்/கிராமம்/ஜோதிநகர் அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

**6.8.14** மேற்கூறிய காரணங்களினால், **23.11.2011** முதல் **28.2.2012** வரை, மின் இணைப்பு எண் **135** ல் மின்சாரம் வழங்கப்படாமல் இருந்ததை எதிர் மனுதாரரின் குறைபாடு என்று தீர்வு செய்யப்படுகிறது.

**6.8.15** தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திற செந்தரல்களுக்கான ஒழுங்குமறை விதி **12** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

“12 மின்வழங்கலில் நேரும் மின் குறுக்கீடுகளும் மீட்பும்

(i) பகிர்மான வலையமைப்பின் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் பருவமுறைப் பேணுதல் பணிகளுக்காக மின்சாரத்தை நிறுத்தும்போது கூடியவரை இது தொடர்பான அறிவிப்பை முன்கூட்டியே உள்ளூர் செய்தித்தாள்களில் அறிவித்திருந்தால், உரிமதாரர் சோதனைக்காகவும் கட்டாய முறிவு மற்றும் பேணுதல் காரணங்களுக்காகவும் அப்படி தேவைப்படும் காலத்துக்குத் தற்காலிகமாக மின் வழங்கலைத் தராமல் நிறுத்தி வைக்கலாம்.

(ii) மின்தடங்கலால் ஒரு நுகர்வோருக்கோ நுகர்வோர் குழுவுக்கோ மின் குறுக்கீடுகள் ஏற்படும் நிகழ்வுகளில் கீழ்க் காணும் அட்டவணைப்படி மின் வழங்கலை மீட்டுத் தர வேண்டும்.

| **குறுக்கீட்டின் காரணம்** | **மின் வழங்கல் மீட்பு நேரம்** | |
|---|---|---|
| | **நுகரம்** | **ஊரகம்** |
| உயர் அழுத்த மின் வழங்கல் பொய்த்தல் | 1 மணி | 6 மணி |
| கம்பப் பெட்டியில் அல்லது மின் மாற்றிக் கட்டமைப்பில் பிழை | 2 மணி | 4 மணி |
| பகிர்மான மின் மாற்றிப் பிழை | 24 மணி | 48 மணி |
| தனி மின்னிணைப்பு பிழை | 3 மணி | 9 மணி |

மாநகராட்சி எல்லைக்குள்ளும் மற்றும் ஆணையம் அவ்வப்போது வகுத்தறிவிக்கும் சிறப்பு பகுதிகளிலும் மின் வழங்கலில் ஏற்படும் மின் குறுக்கீடுகள், மின் பொய்த்தல்கள் நகரப் பகுதிக்குள் குறிப்பிட்ட காலத்துக்குள் அல்லும் பகலும் பணிபுரிந்து மின் வழங்கலை மீட்டுத் தர வேண்டும். மாநகராட்சி எல்லைக்குள் இல்லாத நகரிய மற்றும் ஊரக நுகர்வோர்களிடமிருந்து இரவு நேரங்களில் பெறப்படும் மின் குறுக்கீடுகள் / மின் பொய்த்தல்கள் பற்றிய முறையீடுகளைப் பொறுத்தவரையில் காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் பணிபுரிந்து மின்வழங்கலை மீட்டுத் தரவேண்டும். இரவு நேரங்களில் அதாவது மாலை 6 மணியிலிருந்து காலை 8 மணி வரை தனி நபர் நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் முறையீடுகளை, மறுநாள் பணிநேரத் தொடக்கத்தில் பெறப்பட்டனவாகக் கொண்டு மேலே குறிப்பிட்ட காலத்துக்குள் சரி செய்ய வேண்டும். ஊரகத் தனி நபர் நுகர்வோர்களின் மின்னிணைப்புப் பிழையைச் சரி செய்யும்

காலத்தில் மாலை 6 மணியிலிருந்து காலை 8 மணி வரையிலான இரவு நேரத்தை நீக்கிவிட வேண்டும். என்றாலும் குடிநீர் வழங்கல், மருத்துவமனை மற்றும் பிற இன்றியமையாத பணிகள் தொடர்பான முறையீடுகளை உடனடியாகச் செயல்படத் தொடங்கி அல்லும் பகலும் பணிபுரிந்து சரி செய்ய வேண்டும்.

(iii) மின் குறுக்கீடுகள் ஏற்படும் போது, அக்குறுக்கீடுகளை அவற்றால் பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள் தாம், அருகில் உள்ள உரிமதாரரின் உள்ளூர் அலுவலகத்துக்கோ அல்லது மின் தடங்கல் நீக்கப் பணிமையத்துக்கோ தொலைபேசி வழியாகவோ, எழுத்து மூலமான தகவலைத் தனியொரு ஆளை அனுப்பி வைத்தோ அறிவிக்கும் பொறுப்புடையவர்களாவர். இருந்தாலும், சூறாவளி போன்ற இயற்கைச் சீற்றங்களால் மின்வழங்கலில் பழுதோ, தடங்கலோ ஏற்பட்டால், உரிமதாரர் எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக அத்தகையவற்றை மீட்டுத்தர வேண்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

குறிப்பு : மின் பழுது சரி செய்யும் பணிமுன்னேற்றத்தை நுகர்வோர்களுக்குத் தொடர்ந்து அறிவிப்பதற்கான தக்க ஏற்பாடுகளை உரிமதாரர் மேற்கொள்ள வேண்டும்.

(iv) உரிமதாரர் இருப்புப் பாதை அமைப்புகளுக்குத் தடங்கலற்ற மின் வழங்கலை உறுதிப்படுத்த வேண்டும். அப்படி தடங்கலேதும் ஏற்பட்டால் உயர் முன்னுரிமை அடிப்படையில் சரி செய்து மின் வழங்கலை மீட்டுத் தர வேண்டும்.

(v) சாதனமோ, மின் மாற்றியோ, பழுதுறுவதாலோ, மின் தொடரில் ஏற்படும் பிழைகளாலோ மின் தடங்கல் ஏற்பட்டால், உரிமதாரர் முறையீட்டாளருக்கு (இருவழி தகவல் தொடர்பு இருந்தால்) முறையீடு பெற்ற ஒரு மணி நேரத்துக்குள் தடங்கலுக்கான காரணத்தையும் தடங்கலைச் சரிசெய்து மின்வழங்கல் மீட்டுத் தர எடுத்துக்கொள்ளவுள்ள தோராயமான காலத்தையும் அறிவிக்க வேண்டும்.''

**6.8.16** மேற்கண்ட விதிப்படி தனிமின்னிணைப்பு பிழை என்றால் ஊரகப்பகுதிகளில் 9 மணி நேரத்திற்குள் மின் வழங்கலை மீட்டுத் தரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மின்னளவி எரிந்ததினால் ஏற்பட்ட மின் தடங்கலையும் அந்த பிரிவில்தான் சேர்க்கப்பட வேண்டும்.

**6.8.17** மேலும் விதி 12 (ii) ன் படி மின் குறுக்கீடுகள் ஏற்படும் பொழுது அக்குறுக்கீடுகள் அவற்றால் பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள் தாம் அருகில் உள்ள பிரிவு அலுவலகத்திற்கோ அல்லது மின் தடங்கல் நீக்க பணிமையத்துக்கோ தொலைபேசி வழியாகவோ எழுத்து மூலமான தகவலை தனியொரு ஆளை அனுப்பிவைத்தோ அறிவிக்கும் பொறுப்புடையவர் என்றும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வழக்கில், மின் அளவி எரிந்தமை தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அந்த மின் அளவியை மாற்றுவதற்கு பணம் மின் நுகர்வோர் கட்ட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு காரணமாக பணம் கட்டப்படவில்லை. அதன் பிறகும், மேல் முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பிற்கு மின்சாரம் இல்லை எனவே மின் தடங்கலை சரி செய்ய வேண்டும் என்று பிரிவு அலுவலகத்தில் முறையீடு எதுவும் செய்யவில்லை, ஆனால் 26.3.2012 அன்று அதாவது சுமார் 4 மாதங்களுக்கு பின்பு மின் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அனுப்பிய கடிதத்தில் மின் இணைப்பு எண் 135 ல் 4 மாதங்களாக மின்சாரம் இல்லை என்ற குறையும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மின் நுகர்வோரிடமும், மின் தடங்கலை சரிசெய்ய வேண்டும் என்று தெரிவிப்பதில் தாமதம் ("latches") உள்ளது என்று தெரிகிறது. எனவே 26.3.2012 தெரிவித்தற்கு அவர் மின் அளவிக்கான பணமும், மாதத்தின் சிறுமக்கட்டணமும் செலுத்தினால் தான் மின் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மின் அளவிக்கான கட்டணம் செலுத்துவது பற்றிய வழக்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் உள்ளது. ஆனால் மாதாந்திர சிறுமக்கட்டணம் கட்டாயம் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ஆகும். எனவே, அந்த கட்டணம் செலுத்தப்படாவிட்டால் அந்த மின் இணைப்பிற்கு மின்சாரம் வழங்க முடியாது. அவர் தன்னுடைய மனுக்களில் எரிந்த மின் அளவிக்கு பணம் கட்ட வேண்டாம் என்பதற்குதான் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இருந்தபொழுதும் மின் இணைப்பு எண் 135 க்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. மேலும் மின்மீட்டர் எரிந்தவுடன் எதிர்மனுதாரரின் ஊழியர்கள் தாம் மின் மீட்டரை தனிமைபடுத்தியுள்ளார்கள். அப்பொழுது மின்னிணைப்பை நேரடி இணைப்பாக செய்திருக்கவேண்டும். ஆனால் செய்யப்படவில்லை.

**6.8.18** தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திற செந்தரங்களுக்கான விதிமுறைகளின் விதி 21(4) ன் படி, மின் தடங்கலை மீட்டுத்தர தாமதமாகும் ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் ரூ.50/– ஈட்டுத்தொகையாக தரப்பட வேடும். ஆனால் அது ரூ.2000 ற்கு மேல் இருக்கக் கூடாது என்று உள்ளது.

**6.8.19** இந்த வழக்கில் மின்சாரம் 23.11.2011 ல் இருந்து 28.2.2012 வரை மின்சாரம் கொடுக்கப்பட்டமைக்கு நுகர்வோர் மின் கட்டணத்தையே அல்லது வேறு கட்டணங்களையே செலுத்தவில்லை என்ற காரணம் எதுவுமில்லாததால், தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திற செந்தரங்களின் விதி முறைகளின் விதி 21(4) ன் படி ரூ. 2000/– ஈட்டுத்தொகை தர வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. ஆனால் மாதாந்திர சிறுமக் கட்டணத்தை தள்ளுபடி செய்ய விதிகளில் வழியில்லை என்பதால் மேற்கண்ட மின் இணைப்பால் 23.11.2011 ல் இருந்து புதிய

மின் அளவி பொருத்தப்பட்ட 15.5.2012 தேதி வரை சிறுமக்கட்டணம் கட்டப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

**6.8 <u>கோரிக்கை எட்டின் தீர்வு</u>**

குறை தீர்மன்றத்தின் தலைவர் மீதும், தீர்ப்புரையிலுள்ள குறைகள் மீதும், நடவடிக்கை வேண்டும் என்றும் மேல் முறையீட்டாளர் கோரியுள்ளார். குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பு தனக்கு திருப்தி இல்லை என்றுதான், மேல் முறையீட்டாளர், மேல் முறையீடு செய்துள்ளார். எனவே, இந்த கோரிக்கையை தனியாக தீர்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**7.0 <u>முடிவுரை</u>** மேல் முறையீட்டாளரின் கோரிக்கைகளுக்கான தீர்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(i) <u>கோரிக்கை 1</u>**

பத்தி **6.2** ல் உள்ள தீர்வின்படி servce wire நன்றாக இருப்பதால் அந்த service wire மாற்றப்பட வேண்டாம் என்று மேல் முறையீட்டாளர் சம்மதம் தெரிவித்துள்ளதாலும், aerial fuse மாற்றப்பட்டு விட்டதாலும், இந்த கோரிக்கை நிறைவேறிவிட்டதாக கருதப்பட்டு வேறு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(ii) <u>கோரிக்கை 2</u>**

பத்தி **6.3** ல் உள்ள மின்குறையாளரின் தீர்வின்படி இந்த கோரிக்கையை விலக்கி கொள்வதாக, மேல் முறையீட்டாளர் அறிவித்துள்ளதால், மின்குறை தீர்ப்பளரால் இந்த கோரிக்கைக்கு தீர்வு எதுவும் வழங்கப்பட வில்லை.

**(iii) <u>கோரிக்கை 3</u>**

பத்தி **6.4** ல் உள்ள தீர்வின்படி மேல் முறையீட்டாளரின் மோட்டரின் காயில் (coil) எரிந்து போனதற்கு, இழப்பீட்டுத்தொகை வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(iv) <u>கோரிக்கை 4</u>**

பத்தி **6.5** ல் தெரிவித்துள்ளபடி, திரு. ஆனந்தன் அவர்கள் நுகர்வோரிடம் நடந்து கொண்ட முறைபற்றி விசாரணை செய்து அவர்மீது தவறு இருந்தால், அவருக்கு தக்க அறிவுரை வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

**(v) <u>கோரிக்கை 5</u>**

பத்தி 6.6 ல் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களால், உதவி பொறியாளர் மீது தவறு இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(vi) <u>கோரிக்கை 6</u>** 6.7 ம் பத்தியில் கூறப்பட்டுள்ள காரணங்களினால் செயற் பொறியாளரின் மீது நடவடிக்கை தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(vii) <u>கோரிக்கை 7</u>** பத்தி 6.8இல் தெரிவிக்கப்பட்ட காரணங்களினால், மேல்முறையீட்டாளருக்கு 23.11.2011 முதல் 28.2.2012 வரை, மின்இணைப்பு எண்.135இல் மின்சாரம் வழங்கப்படாமைக்கு, தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திற செந்தரங்களின் விதி21(4)இன்படி ரூ.2000/– ஈட்டுத்தொகை பெற தகுதியுடையவர் என்று தீர்வு செய்யப்படுகிறது. எனவே, எதிர்மனுதாரர் மேற்கண்ட இழப்பீட்டு தொகையை, தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதி 22இல் கூறியுள்ளபடி மேல்முறையீட்டாளருக்கு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும், மேற்கண்ட தீர்ப்பாணை பெற்ற 30 நாட்களுக்குள் தீர்வினை நிறைவேற்றி பதிலை 45 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் மாதாந்திர சிறுமகட்டணம் கட்டப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

**<u>கோரிக்கை 8</u>** பத்தி 6.9 ல் கூறியுள்ளபடி இதற்கு தனியான தீர்வு எதுவும் தேவை இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது,

மேற்கண்ட தீர்வுகளுடன், மேல்முறையீட்டு மனு எண் 24/2012 இன் இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின் குறைதீர்ப்பாளர்

<u>நகல் பெறுநர்</u>

1. திரு. வ.கு. கிருட்டினமூர்த்தி,
   த/பெ. குப்புசாமி,
   250, ராசாமணித் தெரு,
   குறிஞ்சி நகர் விரிவு,
   வெளிச் செம்மண்டலம்,
   கடலூர்

2. மேற்பார்வை பொறியாளர்,
   கடலூர் மின்பகிர்மான வட்டம்,
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   கேப்பர் மலை,
   கடலூர்–4

3. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை, சென்னை – 2.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19எ, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணினி) **– இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.